
# தமிழீழ விளையாட்டுத்துறை - சுவிஸ் கிளை

**Post**: Zieglerstrasse – 30 3007 Bern **Tel**: 0041 76 451 15 13 **mail**: cricswiss@gmail.com

## விதிமுறைகள்

1. **ஆரம்ப நிகழ்வாகிய, கொடியேற்றல், கொடிவணக்கம், அகவணக்கம் நிகழ்வுகளின் போது, முதலாவது ஆட்டத்துக்குரிய அணிகள்,மற்றும் மைதானத்திற்கு வருகை தந்திருக்கும், வீரர்கள், கழகங்கள் மற்றும் அனைவரும் தமது சீருடைகளுடன் ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம். தவறும் பட்சத்தில் குறித்த வீரர்கள், கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகமையிழந்தவர்களாகக் கருதப்படுவர்.**
2. சுற்றுப்போட்டியானது எட்டு வீரர்கள் கொண்டதாகவும் நான்கு பந்துபரிமாற்றங்களுக்கு **(Overs)** குறையாமல் நடத்தப்படும்.
3. **சீரற்ற காலநிலை மற்றும் தவிர்க்க முடியாத காரணங்கள் இருப்பின் சுற்றுப் போட்டியின் நேரஅட்டவணை, ஆட்ட நேரம், மைதானம் ஓவர் போன்றவற்றில் மாற்றம் செய்யும் உரிமை சுற்றுப்போட்டி அமைப்பாளருக்கு உண்டு.**
4. **பதிவு செய்து கொள்ளாத வீரர்கள் விளையாடி அது நிரூபிக்கப்பட்டால் குறித்த வீரரைக்கொண்ட அணி தனது வெற்றிவாய்ப்பை இழப்பதோடு சுற்றுப்போட்டியில் இருந்து முற்றாக வெளியேற்றப்படும்.**
5. தவிர்க்க முடியாத காரணத்தால் ஒருகழகம் கலந்து கொள்ள முடியாத சந்தர்பத்தில் குலுக்கல் முறையில் 17 வதாக தெரிவு செய்யப்பட்ட கழகம் வராதகழத்திற்கு பதிலாக சேர்க்கப்படும். உதாரணமாக 4 அணிகள் உள்ள குழுவில் ஒரு அணி வராது விட்டால் 5 பேர் கொண்ட குழுவில் இறுதியாக சேர்க்கப்பட்ட அணி அந்த குழுவிற்குள் இணைக்கப்படும்
6. **சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் தமக்கான ஒரே நிறத்திலான சீருடை,சப்பாத்து அணிந்து கலந்து கொள்ளுதல் அவசியம்.**
7. **ஆட்டத்தின் போது நடுவரின் அனுமதியின்றி விளையாட்டு விரர் ஒருவர் மைதானத்தை விட்டு வெளியேற முடியாது.அவ்வாறு வெளிறேும் பட்சத்தில் குறித்த வீரர் அதே ஆட்டத்தில் மீளவும் பங்கெடுக்கவோ,பதில் ஆட்டக்காரரை நியமிக்கவோ முடியாது.**




8. **ஆடுகளத்தின் நீளம் 18.5 மீற்றர்**
9. உயர்வாக எழும்பி செல்லும் No Ball க்கு எச்சரிக்கை கிடையாது முதற்பந்தே No Ball ஆக அறிவிக்கப்படும்
10. **Free Kit** கிடையாது
11. சுற்றுப்போட்டிகளில் வீணான குழப்பங்கள் மற்றும் இடையூறுகள் ஏற்படுபவதை தவிர்க்கும் விதத்தில் **இலங்கை அணியின்** சீருடை மற்றும் சின்னங்கள், கொடிகள் பயன்படுத்தப்படுவது உத்தியோகபூர்வமாக தவிர்க்கப்பட்டுள்ளது.
12. **தமிழர்கள் தவிர்ந்த (வேற்று இனத்தவர்) இரண்டு வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.**
13. குறித்த நேரத்தில் இருந்து 05 நிமிடங்களுக்குள் அணி ஆடுகளத்திற்கு சமூகமளிக்க தவறின் மைதானத்தில் நிற்கும் எதிரணிக்கு வெற்றி வாய்ப்பு வழங்கப்படும். இரு அணிகளும் சமூகமளிக்காவிடின் இரு அணிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
14. குழுநிலைப் போட்டிகள் சம நிலையில் முடிவுற்றால் **சூப்பர்ஓவர்** மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்
15. லீக் முறையில் நடைபெறும் போட்டிகளில் ஒரு குழுவிற்குள் இருந்து இரு அணிகளை தெரிவு செய்யும் போது, இரு அணிகள் அணிகள் சம புள்ளிகளைப் பெற்றிருப்பின் முடிவினைத் தீர்மானிக்க தலா 1-பந்துபரிமாற்றம் **(over)** கொடுக்கப்பட்டு வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும். அதிலும் சம நிலை காணப்படின் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்

**குழு நிலைப்போட்டிகளில் மூன்று அணிகள் சம புள்ளிகளைப் பெற்றிருப்பின் பின் வரும் முறையில் அணிகள் தெரிவு செய்யப்படும்.**

- குலுக்கல் மூலம் **1,2,3** என கழகங்கள் தெரிவு செய்யப்படும்
- முதலாவதாக ஒன்றும் இரண்டும் போட்டியிடும் இதில் வெற்றி பெறும் அணி குழுவில் முதலாவதாகத் தெரிவாகும் **(Winner)** தோல்வியுற்ற அணி மூன்றாவது அணியுடன் மோதும். இதில் வெற்றி பெறும் அணி இரண்டாவது இடத்தினைப் **(Runnar)** பெறும்.

  **உதாரணம் :**

- **1 எதிர் 2** = வெற்றியாளர் = **Winner 1**
- **தோல்வியடைந்த அணி ( Runner)** எதிர் **3** = வெற்றியாளர் குழுவின் **Runner.**

**16.** கால் இறுதி, அரை இறுதி, இறுதிப் போட்டிகள் சம நிலையில் முடிவுற்றால் மேலதிகமாக ஒரு பந்துப் பரிமாற்றம் **(over)** வழங்கப்பட்டு வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும். அதிலும் சம நிலை காணப்படின் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்

**17.** ஒவ்வொரு அணியினரும் தங்களது முதல் ஆட்டத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் மைதான அலுவலகத்தில் தங்களது வரவினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**18. பதிவு செய்யப்பட்ட வீரர்களில் இருந்து ஒரு சுற்றுப்போட்டிக்கு ஆகக்கூடுதலாக 15 வீரர்களின் பெயர்களை தெரிவு செய்யலாம்.**

**19.** எதிரணி சம்பந்தமான ஆட்சேபமனு, தங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டி முடிவடைந்து பத்து நிமிடங்களுக்குள் ஆதாரங்களுடன் இதற்கென உரிய 'பாதுகாப்பு முறைப்பாட்டுப் படிவம்' பூர்த்திசெய்யப்பட்டு பிணைப்பணமாக 20 சுவிஸ் பிறாங்குகள் சேர்த்து தாக்கல் செய்யப்படவேண்டும். முறைப்பாட்டின் பெறுபேறு முறைப்பாட்டாளருக்கு சாதகமாக இருப்பின் பிணைப்பணம் மீளளிக்கப்படும். பாதகமாக இருப்பின் மீளளிக்கப்படமாட்டாது

**20.** போட்டி நடைபெறும் வேளையில் அணியின் உறுப்பினர் ஒருவர் புள்ளிகள் பதிவு செய்பவருடன் இருத்தல் அவசியம்.

**21.** மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டிக் குழுவினரால் வழங்கப்படும் பந்துகள் மட்டுமே போட்டியின் போது பயன்படுத்தலாம்.

**22.** நான்கு தொடக்கம் ஐந்து பந்து பரிமாற்றங்கள் **(overs)** கொண்ட சுற்றில் ஒரு பந்துவீச்சாளர் ஆகக்கூடுதலாக ஒரு பந்துப்பரிமாற்றத்தை மட்டுமே **(over)** மேற்கொள்ளலாம். 6 -10 வரையான ஓவர்களை கொண்ட போட்டிகளுக்கு அட்டவணையை பார்க்கவும்.

**23.** போட்டி விடயங்கள் தொடர்பாக அணித்தலைவர் அல்லது அணிக்காப்பாளர் மட்டுமே சுற்றுப்போட்டிக் குழுவினருடன் உரையாடமுடியும்.

**24.** மைதானத்தில் மதுபானம் பாவித்தல் தகாத வார்த்தைகள் பேசுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

**25.** பரிசளிப்பின் போது கழகங்கள் தங்கள் கழக சீருடையுடன் பங்குபற்றுதல் அவசியம்

**26. வீரர்கள் மதுபானம், போதைப் பொருள் போன்றவற்றை உட்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த அணி தனது வெற்றி வாய்ப்பினை இழப்பதோடு, குறித்த வீரர்/வீரர்கள் அச்சுற்றுப்போட்டி முழுவதிலும் விளையாட அனுமதி மறுக்கப்படுவதோடு குற்றப்பணமாக குறித்த கழகம் 600.- சுவிஸ்-பிறாங்குகளை செலுத்த வேண்டும்**

**27.** சுவிஸ் மென்பந்து துடுப்பாட்டபிரிவின் அங்கத்துவ அணிகளில் அங்கத்துவம் பெறாத வீரர்கள் வெளிநாடுகளிலிருந்து கலந்துகொள்ளும் அணிகளுக்காக விளையாட முடியும்.

**28.** தங்கள் கழகத்திற்கு வெளிநாடுகளில் இருந்து எட்டுப்பேர் கொண்ட போட்டிகளுக்கு மூன்று தமிழர்களும் பதினொருபேர் கொண்ட போட்டிகளுக்கு நான்கு தமிழர்களும் விளையாடலாம்.

**29.** நடுவர்களாக சுவிஸ் மென்பந்து துடுப்பாட்டப்பிரிவில் பதிவு செய்யப்பட்டவர்களே கடமையாற்றுவார்கள். சுற்றுப்போட்டி தினத்தன்று நடுவரை மாற்றக்கோரும் விண்ணப்பம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

**30. சுற்றுப்போட்டிகளில் நடுவரின் தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். இதில் ஆட்சேபம் கொள்ளும் அணிகள் அல்லது வீரர்கள் தமது கருத்தை சுற்றுப்போட்டி நடாத்தும் அமைப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு வருதல் வேண்டும், மாறாக இது தொடர்பாக மைதானத்தில் கலகத்தில் ஈடுபடுதலோ அல்லது நடுவரின் தீர்ப்பை மீறி மைதானத்தை விட்டு வெளியேறுதலோ அனுமதிக்கப்பட மாட்டாது.**

**31.** ஆட்டத்தின்போதோ, ஆட்டம் நடைபெற்று முடிந்த பின்னரோ தங்கள் கழக வீரர்களாலோ, ஆதரவாளர்களாலோ சுற்றுப்போட்டிக்கோ, நடாத்துனருக்கோ இடையூறு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளும் முழுப்பொறுப்பும் கழகத்தையே சாரும். இவர்களால் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்தால் குறித்த கழகம் தொடர்ந்து நடைபெறும் மூன்று சுற்றுப்போட்டிகளிலும் தமிழீழக் கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டியிலும் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.

**32. வெளிநாட்டில் இருந்து கலந்து கொள்ளும் அணிகள் அடுத்த ஆண்டு இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.**

**33.** வீரர்கள் தமக்கிடையே கைகலப்பில் ஈடுபட்டால் குறித்த வீரர்கள் குறித்த ஆட்டத்துடன் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவதுடன் **மென்பந்து துடுப்பாட்டப்பிரிவால்** நடாத்தப்படும் இரண்டு சுற்றுப் போட்டிகளில் தொடர்ச்சியாக விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினையும் அத்துடன் அவரிடம் இருந்து அபராதப் பணமாக **SFR 100.- அறவிடப்படும்.**

**34. ஒரு வீரரது பந்து வீச்சு எறி போலாக அமைந்தால், நடுவரால் எச்சரிக்கப் படுவார். இரண்டாவதாகவும் எறி போலாக அமைந்தால் தொடர்ந்து அன்றைய சுற்றுப்போட்டியில் பந்து வீசுவதற்கு தடை விதிக்கப்படும்.**

**35.** ஆட்டம் ஆரம்பமாகிய பின்னர் ஒரு வீரர் வருகை தரும் பட்சத்தில்,இரண்டாவது ஓவரில் இருந்துதான் பந்து வீசலாம்.அதேபோல் இறுதி ஓவர் நடைபெறும் போது வருகை தந்தால் **Opening Batsman** ஆகப் போக முடியாது.

**36.** பந்து வீசும்போது பந்து தரையுடன் உருண்டால் **Deth Ball** இல்லை

**37.** பிரதான நடுவரின் தீர்ப்பே இறுதியானது. சிக்கலான வேளைகளில் லெக் அம்பயருடன் கலந்தாலோசித்து இறுதி முடிவினை பிரதான நடுவர் அறிவிப்பார்

**38.** ஆட்டத்தின் போது பந்து உடைந்தால் துடுப்பாட்டக்காரருக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்படும்.

- எல்லைக்கோட்டினைக் கடந்து 4 அல்லது 6 ஓட்டங்கள் பெற்றிருப்பின் அந்த ஓட்டங்கள் துடுப்பாட்டக்காரருக்கு வழங்கப்படும்.
- மைதான எல்லைக்குள் பந்து உடைந்து ஆட்டமிழப்பு ஏற்பட்டால்,வீரருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்படும் **(Not OUT, Death Ball)** ஓட்டங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

**சுற்றுப்போட்டி ஏற்பாட்டுக்குழு 2019**

**மென்பந்து துடுப்பாட்டபிரிவு**